

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 70-வது நினைவு நாளையொட்டி, கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில், அன்னாரது திருவுருவப்படத்திற்கு இன்று (30.01.2017) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

செ.வெ.எண்: 78/2017 நாள்: 30.01.2017

**அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 70-வது நினைவு நாளையொட்டி**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள்,**
**கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில்,**
**அன்னாரது திருவுருவப்படத்திற்கு**
**மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 70-வது நினைவு நாளையொட்டி, கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில், அன்னாரது திருவுருவப்படத்திற்கு இன்று (30.01.2017) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்ட சர்வோதய சங்கத்தின் சார்பில் 2 கை ராட்டினம் வைக்கப்பட்டு நூல் நூற்பு வேள்வி நடைபெற்றதை பார்வையிட்டார். இந்த நூல் நூற்பு வேள்வியானது, இன்று தொடங்கி, தொடர்ந்து 14 நாட்கள் காலை 9.30 மணி வரை மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. இதில், நாளொன்றுக்கு சுமார் 40 சிட்டம் நூல் நூற்பு வேள்வி நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப.காந்தி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு. நி.சையத் முஹம்மத், கன்னியாகுமரி மாவட்ட சர்வோதய சங்கத்தின் சார்பில் திருமதி. ஜெ.எம்.புஷ்பபாய், திருமதி ஆர்.பொன்னம்மாள், திருமதி. சி. ரத்னகனி, அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.